செ.வெ.எண்: 28 நாள்: 11.04.2020

## கரூர் மாவட்டம்

# கரூர் மாவட்டத்தில் பல்வேறு வெளிமாநிலங்களிலிருந்து வருகை வந்து கட்டுமான தொழில்புரியும் 316 தொழிலாளர்களுக்கு அத்தியவாசிய உணவுப்பொருள் தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள்

கரூர் மாவட்டம் தோரணக்கல்பட்டி பகுதியில் பல்வேறு வெளிமாநிலங்களிலிருந்து கரூரில் தங்கி கட்டுமான தொழில்புரியும் தொழிலாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.04.2020) அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் உள்ளிட்ட உணவுப்பொருட்களை வழங்கினார்கள்.

**இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.**

கொரோனா தொற்று பரவலை தடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் 144 தடை உத்தரவு நடைமுறையில் உள்ளது. அதன் காரணமாக வெளிமாநிலங்களிலிருந்து தமிழகம் வந்து பணிபுரியும் கட்டுமான தொழிலாளர்களின் நலன் கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பு நிவாரண உணவுத் தொகுப்பு வழங்குவதாக அறிவித்துள்ளார்கள்.

அதன்அடிப்படையில் கரூர் மாவட்டத்தில் மேற்குவங்காலம், பீகார், அசாம், ஒரிசா மற்றும் உத்தரபிரதேசம் உள்ளிட்ட வெளிமாநிலங்களிலிருந்து பணிபுரிந்து வருகிறார்கள். தோரணக்கல்பட்டியில் குடிசை மாற்று வாரியம் மூலம் 32 வீடுகள் கொண்ட 20 தொகுப்புகளில் என 640 வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. இப்பணியில் 67 பணியாளர்களும், சின்னதாராபுரம் பகுதியில் காற்றாலை கட்டுமான பணியில் 249 பணியாளர்களும் என மொத்தம் 316 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்ததொழிலாளர்களுக்கு அரிசி 15 கிலோ, பருப்பு 1 கிலோ மற்றும் சமையல் எண்ணெய் 1 கிலோ ஆகியவை சிறப்பு நிவாரண உணவுத் தொகுப்புகள் சமுக விலகள் கடைபிடிக்கப்பட்டு விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியம் மற்றும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர் நலவாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்கள் இத்திட்டத்தில் பயன்பெற தங்களது நலவாரிய அட்டை அல்லது நலவாரிய ஓய்வூதிய ஆணை, குடும்ப அட்டை, ஸ்மார்ட் கார்டு, ஆதார் அட்டை, வங்கி கணக்குப்புத்தகம் ஆகியவற்றினை தங்கள் பகுதியிலுள்ள நியாயவிலைக் கடைகளில் பொருள் வழங்குபவர்களிடம் நேரில் காண்பித்து சமுக விலகளை கடைபிடித்து பெற்றுக்கொள்ளலாம்.

என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ..ப. அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாச்சியர் திருமதி வ.சந்தியா, மாவட்ட தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துனை இயக்குநர் திருமதி சுசிலா, தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய உதவி செயற்பொறியாளர் திரு.கருப்பசாமி. வட்டாச்சியர் திருமதி அமுதா, உதவி பொறியாளர் திரு.பாலாஜி உள்ளிட்டோர் உடனிருந்தனர்,

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**